**FIRST INFORMATION REPORT** | TAMIL NADU POLICE

முதல் தகவல் அறிக்கை | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129895

**Under Section 173 BNSS**

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **12/2024** Date: நாள் **10.10.20**

2. (i) Act சட்டம்: **BNSS** Sections பிரிவுகள்: **106**
   (ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** Sections பிரிவுகள்: **7, 12 r/w 7**
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **09.10.2024** Date to : நாள் வரை **09.10.2024**
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **15.50 hrs** Time to : நேரம் வரை **21.45 hrs**
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **10.10.2024** Time : நேரம் **1000 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - II** Time : நேரம் **1000 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 30 கி.மீ. மேற்கு**
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **சார் பதிவாளர் அலுவலகம், புதுப்பேட்டை**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் **--** District : மாவட்டம் **--**

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **இரா.சுமித்ரா** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **45** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் **——** Place of Issue : வழங்கப்பட்ட இடம் **——**
   (f) Occupation : தொழில் **துணை ஆய்வுக்குழு அலுவலர்** (g) Address : முகவரி **ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **1) S.இசக்கியப்பன். உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், கடலூர், சார் பதிவாளர் (பொறுப்பு), புதுப்பேட்டை சார் பதிவகம், கடலூர் பதிவு மாவட்டம்.**
   **2) M. வாசு, த/பெ.முருகப்பன், எண்.24, பக்கிரிபாளையம் தெரு, புதுப்பேட்டை அஞ்சல்,**
   **3) P. கணேசன், த/பெ.பழனிசாமி, எண்.44, மீனாட்சியம்மன் பேட்டை தெரு, புதுப்பேட்டை**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **தாமதமில்லை**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

நான் இன்று 10.10.2024 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.இரா.சுமித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் இரா.சுமித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். <u>ந.க.எண்.A/538/2024 நாள் : 10.10.2024</u> அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு - நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் -

(தொடர்ச்சி பக்கம்-3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………….. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Sumithra 10/10/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

10/10/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

(P. ANBALAGAN)
Name: பெயர் ……………………
Rank: நிலை Inspector of Police ………………..No. எண் ……….
VLAC, Cuddalore

சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் (இருப்பு) துணை ஆய்வுக்குழு அலுவலரான இரா.சுமித்ரா ஆகிய நான் 09.10.2024ந் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, கடலூர் மாவட்டம், புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில், பத்திரப்பதிவுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி புதுப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 03.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு புதுப்பேட்டை சார் பதிவாளர் அவர்களுக்கு கொடுக்க உள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 03.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு புதுப்பேட்டையில் பேட்டை வீதியில் வடக்கு திசை பார்த்தவாறு அமைந்துள்ள புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் புதுப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 15.50 மணிக்கு வடக்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, மெயின் கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலின் இடது புறம் உள்ள உள்ள அறையில் வடக்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும்

ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சார் பதிவாளர் அவர்களை விசாரித்தபோது அவர் தனது பெயர் S.இசக்கியப்பன், வயது 59, த/பெ சொர்ணம், உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், கடலூர் என்றும், தற்போது 01.10.2024ந் தேதி முதல் புதுப்பேட்டை பதிவகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். உடன் இருந்த நபர்களை விசாரித்தபோது, (1) K.நித்யா (வயது 34), க/பெ, எம்.சரவணகுமார், உதவியாளர். (2) S.கீர்த்தனா (வயது 22), த/பெ, சரவணன், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் (Outsourcing Sigma Tel), (3) R.கதிர்காமசெல்வன் (வயது 45, த/பெ, ராஜாகண்ணு, அலுவலக உதவியாளர், (4) R.உமாமகேஸ்வரி, க/பெ, கோகுலகிருஷ்ணன், Camera Operator (Outsourcing Sigma Tel), மேலும் அலுவலகத்தில் இருந்த சில வெளி நபர்களை விசாரித்ததில் (1) P.பாலாஜி (வயது 44), த/பெ.பொன்னப்பன், (வழக்கறிஞர் கண்ணன் அலுவலகத்தில் உதவியாளர்), (2) M.வாசு (வயது 56), த/பெ.முருகப்பன், (Broker), (3) வெங்கடேசன், த/பெ, முத்துசாமி, (பதிவு பெற்ற ஆவண எழுத்தர் இராஜகோபால் என்பவரது அலுவலகத்தில் உதவியாளர்), (4) P.கணேசன், வயது 62, த/பெ.பழனிசாமி, ஆவண எழுத்தர், நெ.44, மீனாட்சி அம்மன் பேட்டை தெரு, புதுப்பேட்டை, பண்ருட்டி, 5) K.கோதண்டபாணி (வயது 68), த/பெ.கண்ணுசாமி, நல்லூர்பாளையம், பண்டரக்கோட்டை, பண்ருட்டி, ஆகியோர் புதுப்பேட்டை சார்பதிவகத்தில் ஆஜரில் இருந்தனர். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை அவர்களிடம் தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகமானது Madras Terrace Roof ஆல் அமைக்கப்பட்ட கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் மெயின் ஹால் சுமார் 10க்கு 16 அடி நீள அகலமுள்ளது. மேற்படி ஹாலுக்கு கிழக்கு திசையில் சுமார் 8 அடிக்கு 16 அடி நீள அகலமுள்ள அறையில்

வடக்கு பார்த்தவாறு சார் பதிவாளர் இருக்கை உள்ளது மேற்படி இருக்கையில் அமர்ந்திருந்த பொறுப்பு சார் பதிவாளரின் மேஜையை சோதனை செய்யப்பட்டதில், பணம் ஏதும் இல்லை. அப்போது அவரிடம் தனி நபர் இருப்பு பதிவேட்டினை ஆஜர் செய்யுமாறு கேட்கும்போது, அவர் அப்பதிவேட்டினை ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டினை பார்த்தபோது 09.10.2024 ஆம் தேதியில் வரிசை எண்.1ல் இசக்கியப்பன், சா.ப. தொகையில் 1100 என்றும், வரிசை எண்.2ல் கதிர்காமசெல்வன், அ.உ. தொகையில் 350 என்றும், வரிசை எண்.3ல் நித்யா, உதவியாளர், தொகையில் 2100 குறிக்கப்பட்டிருந்தது. பின்னர் அவரை திரேக சோதனை செய்ததில் அவரது வலது பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 7x500, 1x200, 11x100, 2x50 ஆகமொத்தம் ரூ.4,900/- இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. பொறுப்பு சார் பதிவாளர் அருகில் நாற்காலியில் அமர்ந்திருந்த வாசு என்பவரை சோதனை செய்ததில் அவரது சட்டையின் மேல் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 19x500, ஆகமொத்தம் ரூ.9,500/- இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் பொறுப்பு சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்த பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அதே அறையில் இருந்த Camera Operator திருமதி.உமாமகேஸ்வரி என்பவரை காவல் குழுவில் இருந்த பெண் காவலர் மூலம் சோதனை செய்ததில் அவரிடம் பணம் எதுவும் இல்லை. பின்னர் அதே அறையில் இருந்த திரு.பாலாஜி என்பவர் கண்ணன் வழக்கறிஞரின் உதவியாளர் என்பவரை சோதனை செய்ததில் அவரிடம் பணம் எதுவும் இல்லை. பின்னர் மெயின்ஹாலில் போடப்பட்டிருந்த மேஜையின் அருகே உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த உதவியாளர் நித்யா என்பவரை பெண் காவலர் மூலம் சோதனை செய்ததில் அவரது கைப்பையில் ரூ.2,000/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் விசாரித்ததில், தான் ரூ.2100/- தனது சொந்த செலவிற்காக காலை வீட்டிலிருந்து கொண்டுவந்ததாகவும்,

அப்பணத்தின் விவரத்தினை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும், அப்பணத்தில் ரூ.100 மதிய உணவிற்கு செலவு செய்தது போக மீதி பணம் ரூ.2000/- வைத்துள்ளதாக சரியான முகாந்திரம் தெரிவித்ததால், மேற்படி பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அருகில் அமர்ந்திருந்த Data Entry Operator கீர்த்தனா என்பவரை பெண் காவலர் மூலம் சோதனை செய்த்தில் அவரிடம் பணம் எதுவும் இல்லை. அந்த சமயத்தில் பொறுப்பு சார் பதிவாளர் ஹாலில் மேஜையில் வைத்திருந்த தனி நபர் பண இருப்பு பதிவேட்டை எடுத்து அவரது அறைக்கு சென்று அப்பதிவேட்டில் இன்றைய தேதியில் அவர் பணம் ரூ.1,100 கொண்டு வந்துள்ளார் என குறிக்கப்பட்டிருந்த்தை ஆய்வு குழுவினரை ஏமாற்றி திசை திருப்பும் நோக்கோடு அரசு ஆவணத்தை திருத்தி 1100 என்று எழுதியிருந்த்தை 8000 என்று பேனாவால் மாற்றம் (Tamper) செய்துவிட்டார். அவர் மேற்படி பதிவேட்டில் மாற்றம் செய்தது CCTV Camera-வில் பதிவாகியுள்ளது. மேற்கண்ட CCTV Camera- பதிவினை Camera Operator திருமதி.உமாமகேஸ்வரி என்பவரால் ஒரு CDயில் பதிவிறக்கம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஹாலில் இருந்த கோதண்டபாணி என்பவரை திரேக சோதனை செய்ததில் அவர் வைத்திருந்த கைப்பையில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 38x500 = 19000 இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க, பத்திர பதிவிற்கு பத்திரம் வாங்குதற்காக கடன் வாங்கி ரூ.60000/- கொண்டுவந்ததாகவும், அதில் ரூ.41000/-க்கு பத்திரம் வாங்கியது போக மீதி பணம் என்று சரியான முகாந்திரம் தெரிவித்ததால், அப்பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த பத்திர எழுத்தர் இராஜகோபால் என்பவரின் உதவியாளர் வெங்டேசன் என்பவரை சோதனை செய்ததில் அவரிடம் பணம் எதுவும் இல்லை. பின்னர் ஹாலின் மேற்கு திசையில் உள்ள அறையில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.கதிர்காமச்செல்வன் என்பவரை திரேக சோதனை செய்ததில் அவரது மேல்சட்டை பாக்கெட்டில் ரூ.350/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் விசாரித்ததில், தான் ரூ.350/- தனது சொந்த செலவிற்காக

காலை வீட்டிலிருந்து கொண்டுவந்ததாகவும், அப்பணத்தின் விவரத்தினை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்ததால், ஆய்விற்கு பின்னர் மேற்படி பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலக வராண்டாவில் இருந்த ஆவண எழுத்தர் கணேசன் என்பவர் உடைமைகளை சோதனை செய்ய அவர் வைத்திருந்த கைப்பையில் கத்தையாக பணம் இருந்தது. அப்பணத்தை எண்ணிப்பார்க்க 119x500, 200x10, 100x5 ஆக மொத்தம் ரூ.62,000/- இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் பொறுப்பு சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்த பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலிற்கு தென்புறத்தில் உள்ள பதிவறையை சோதனை செய்ததில் அலுவலகத்தில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் அலுவலகத்திற்கு தெற்கு திசையில் தெற்கு பார்த்தவாறு கழிவறை மற்றும் குளியல் அறைகள் இருந்தன. அவற்றை சோதனை செய்ததில் நான்காவது குளியறையில் தென்மேற்கு திசையில் சோப்பு வைக்கும் மாடத்தின் மீது குவியலாக பணம் வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 240x500, 4x200, 286x100, 12x50 ஆகமொத்தம் ரூ.1,50,000/- இருந்தது. மேற்படி பணம் பற்றி பொறுப்பு சார் பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் இருந்தவர்களை விசாரிக்க யாரும் உரிமை கோராததால் மேற்படி பணம் பொறுப்பு சார் பதிவாளர் லஞ்சமாக பெற்று மறைத்து வைத்திருக்கலாம் என்று கருதி அப்பணம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையில் மொத்தம் ரூ.2,26,400/- பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், புதுப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 1) தொகுதி எண்.74, தனி நபர் பண இருப்பு பதிவேடு 01.01.2024 முதல் 31.12.2024 வரை என்று லேபிள் ஒட்டப்பட்ட பதிவேடு (மொத்த பக்கங்கள் 1 முதல் 198, பயன்படுத்தப்பட்ட பக்கங்கள் 1 முதல் 33 வரை), (2) தொகுதி எண்.74, வருகை பதிவேடு 01.01.2024 முதல் 31.12.2024 வரை என்று லேபிள் ஒட்டப்பட்ட பதிவேடு (மொத்த பக்கங்கள் 1 முதல் 32, பயன்படுத்தப்பட்ட பக்கங்கள் 1 முதல் 23 வரை), (3) களப்பணி பதிவேடு (27.09.2024 வரை பதிவு செய்யப்பட்டுள்ளது) (4)

30.09.2024 முதல் 09.10.2024 வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் abstract பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பமிட்டு மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.இசக்கியப்பன், ஆவண எழுத்தர், திரு.கணேசன், Broker திரு.வாசு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. எந்தெந்த பொருட்கள், ஆவணங்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டதோ அதே இடத்தில் பழைய நிலையில் மீண்டும் வைக்கப்பட்டது. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது புதுப்பேட்டை சார்பதிவாளர் (பொறுப்பு), அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், அலுவலகத்திலிருந்த ஆவண எழுத்தர் மற்றும் அலுவலகத்தில் இருந்த பொதுமக்கள் ஆகியோர்களுக்கு எந்தவித உடல் பாதிப்போ, மன உளைச்சலோ ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 16.10 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 21.45 மணிக்கு முடிக்கப்பட்டது. 09.10.2024ந்தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,26,400/-, (1) திரு.இசக்கியப்பன், உதவியாளர், (பொறுப்பு) சார்பதிவாளர், புதுப்பேட்டை சார்பதிவகம், (2) திரு.வாசு, ஆவண எழுத்தர் மற்றும் (3) திரு.கணேசன், ஆவண எழுத்தர் ஆகியோரது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 10.10.2024ந்தேதி காலை 10.00 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். எனவே (1) S.இசக்கியப்பன், வயது 59, உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், கடலூர், (பொறுப்பு) சார் பதிவாளர், புதுப்பேட்டை சார்பதிவகம், கடலூர் பதிவு மாவட்டம், (2) திரு.வாசு, ஆவண எழுத்தர் மற்றும் (3) திரு.கணேசன், ஆவண எழுத்தர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை

எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் ------ (இரா.சுமித்ரா), துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Sir,

Received the above computer typed complaint on 10.10.2024 at about 10.00 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.12/2024, u/s 106 BNSS and 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 10.10.2024 at 11.00 hours. sd/- xxxx 10.10.2024 (P.Anbalagan), Inspector of Police, V&AC, Cuddalore.

10/10/2024
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore